## பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28 அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை: டாக்டர். இரா.செல்வராஜ்., இ.ஆ.ப.,

ந.க.எண். 6102/2018/அ6 நாள்: 15 .02.2022

பொருள்: கருணை அடிப்படையில் பணிநியமனம் – பேரூராட்சிகள் நிர்வாகம் – திண்டுக்கல் மண்டலம் – திண்டுக்கல் மாவட்டம் – கன்னிவாடி பேரூராட்சியில் வரித்தண்டலராகப் பணிபுரிந்து – 09.12.2010ல் பணியிடையில் காலமான பாஸ்கரன்(திரு).ரெ – என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய வேணுகோபால் (திரு) பா. –என்பவரை கருணை அடிப்படையில் பாளையம் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிநியமனம் செய்யப்பட்டது– 22.09.2016 முற்பகல் முதல் வரித்தண்டலராக பணியில் சேர்ந்தது –வரித்தண்டலர் பணிநிலையில் ஓராண்டு பணி பூர்த்தி செய்தது–பணிவரன்முறை செய்தல் – தொடர்பாக.

பார்வை:
1) திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்ந.க.எண்.2386/2011/பேரூ2,நாள்.20.09.2016.
2) திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதம் ந.க.எண்.2386/2011/பே2, நாள்.11.05.2018.
3) இவ்வியக்கக கடிதம் ந.க.எண்.6102/2018/அ9, நாள்.05.06.2018
4) அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021.
5) அரசுகடித(ப)எண்.10656/பேரூ.1/2018–1, நாள்.01.12.2021

*******

ஆணை:

திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடி பேரூராட்சியில் வரித்தண்டலராரக பணிபுரிந்து 09.12.2010–ல் பணியிடை காலமான திரு.ரெ.பாஸ்கரன் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.பா.வேணுகோபால் என்பவருக்கு பார்வை 1–ல் காணும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் திண்டுக்கல் மாவட்டம், பாளையம் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிநியமனம் வழங்கப்பட்டதை தொடர்ந்து தனியர் 22.09.2016 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக பார்வை 2–ல் காணும் கடிதத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தனியரது பணியினை வரன்முறை செய்ய வரப்பெற்ற கருத்துருவினை பார்வை 3–ல் காணும் இவ்வியக்கக கடிதம் மூலம் அரசுக்கு அனுப்பி

வைக்கப்பட்டது. பார்வை 5–ல் காணும் அரசு கடிதத்தில் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021–ல் வெளியிடப்பட்ட வழிமுறைகளின் படி நியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற **பேரூராட்சிகளின் ஆணையர்** நிலையிலேயே இந்நேர்வில் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, திண்டுக்கல் மாவட்டம், பாளையம் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் திரு.பா.வேணுகோபால் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான கலம் 5–ல் காணும் நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

| வ. எ | பணியாளர் பெயர்/ பணியின் நிலை | பணிபுரியும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணியினை வரன்முறைப்படுத்திய நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திரு.பா.வேணுகோபால் வரித்தண்டலர் | பாளையம் பேரூராட்சி | 22.09.2016 மு.ப | 22.09.2016 மு.ப |

மேலும் தனியரின் பணிப்பதிவேட்டில் இப்பொருள் தொடர்பாக உரிய பதிவுகளை மேற்கொள்ளவும், பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பதிவேட்டின் நகலினை அனுப்பிடவும் திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

பேரூராட்சிகளின் ஆணையர்

பெறுநர்:
திரு.பா.வேணுகோபால்,
வரித்தண்டலர்,
பாளையம் பேரூராட்சி.
(திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக)

நகல்:
1. மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் மாவட்டம்
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் மண்டலம்
3. செயல் அலுவலர், பாளையம் பேரூராட்சி
4. அ6 இருப்புப் கோப்பு